அ.வ.எண். 149/2019 நாள்: 25.02.2026

வா.சா.1 திருமதி.ராஜேஸ்வரி

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

11) பிரதிவாதிகள் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதி பானுமதி பெயரில் தாவா சொத்தானது 15.10.2019 அன்று கிரையம் செய்யப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் ஆமாம், அந்த விவரம் தெரிந்துதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். வழக்கு சொத்தை பிரதிவாதிகள் அனுபோகம் செய்து கொண்டு எனக்கு விட மறுக்கிறார்கள் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது அனுபோகத்தில் உள்ள வழக்கு சொத்தை பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

12) வழக்கு சொத்தான 33 செண்ட் எனது அனுபோகத்தில் உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் 33 செண்ட் நிலத்தையும் சேர்த்து 93 செண்ட் நிலத்திற்கு வரி செலுத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.17 வரையிலான வரி ரசீதுகளில் 93 செண்ட் நிலத்திற்கு வரி செலுத்துவதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் வரி ரசீதுகளில் 93 செண்ட் என்று குறிப்பிடப்படுவதில்லை. நான் செலுத்திய வரி ரசீதுகள் அனைத்தும் கூட்டு பட்டாவிற்குரியது என்றால் சரிதான். பட்டா நம்பர் 384–ல் பிரதிவாதி பெயர் உள்ளது என்றால் சரிதான். 2017–க்கு பிறகு பட்டா நம்பர் 384–க்கு நான் வரி செலுத்தவில்லை என்றால் 2017–ல் மட்டும் வரி கட்டவில்லை, அதற்கு முன்பும், பின்பும் வரி செலுத்தியுள்ளேன் 2017–ல் அரசு வரி தள்ளுபடி செய்துவிட்டதால் கட்டவில்லை.

13) அரசாங்கத்தில் வரி தள்ளுபடி செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3–ல் எனது பெயருக்கு தனிபட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ராமசாமி செட்டியாரிடமிருந்து 1985–ல் கிரையம் பெற்ற சொத்தின் மொத்த விஸ்தீரணம் 60 செண்ட் என்றால் சரிதான், அதற்கு மட்டும் அரசாங்கத்தால் என் பெயருக்கு தனிப்பட்டா வழங்கப்பட்டு நான் வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். 15.10.1985 ஆம் தேதி நான் கிரையம் பெற்ற பத்திரத்தில் 60

செண்ட் மட்டும்தான் விற்பனைக்கு கட்டுப்பட்டது என்றும், எனது அனுபவத்தில் விடப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான், கூடுதலாக 33 செண்ட் எனது அனுபவத்தில் உள்ளது. மேற்படி 33 செண்டை எதனடிப்படையில் அனுபவம் செய்கிறேன் என்றால் 33 செண்ட் நிலத்தில் வரும் வருமானத்திலிருந்து வாத்தலையம்மன் கோவிலுக்கு பூஜைக்கு தேவையானதை செய்யுமாறு வாய்மொழியாக கூறி அதன் அனுபவத்தை என்னிடம் ராமசாமி செட்டியார் மற்றும் அவரது மகன் சுந்தரம் செட்டியார் கூறியிருந்தார்கள் அதனடிப்படையில் அனுபவம் செய்து வருகிறேன்.

14) மேற்படி 33 செண்ட் அனுபவத்தை எந்த வருடம் என்னிடம் கொடுத்தார்கள் என்றால் நான் கிரையம் 1985–யே கொடுத்தார்கள். மேற்படி 33 செண்ட் நான் அனுபவம் செய்து வருவதற்கு ஆவணம் எதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி 33 செண்ட்–ஐ பொறுத்து நான் குத்தகைதாரர் என எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 33 செண்ட்–க்கு உரிமை நேரடியாக கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். நான் குத்தகை சாகுபடி செய்வதற்கு குத்தகை உரிமை பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தானது 1ஆம் பிரதிவாதிக்கு கடந்த 2019 ஆண்டு கிரையம் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். யார் கிரையம் செய்து கொடுத்தார் என்று விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கிற்கு பிறகு தெரிந்துகொண்டேனா என்றால் ஆமாம்.

15) வழக்கு சொத்தை என்னிடம் அனுபவம் ஒப்படைத்ததாக சொல்லப்படும் ராமசாமி செட்டியாரின் மகன் சுந்தரம் செட்டியாரை தெரியும் என்றால் சரிதான். வழக்கு சொத்தை சுந்தரம் செட்டியாரின் மனைவி மயிலி, மகள் சகுந்தலா ஆகியோர் சட்டப்படியான வாரிசுகள் என்ற முறையில் 1ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் புல எண்.229/3–ல் 1 ஏக்கர் 68 செண்ட் –ல் 60 செண்ட் நானும், 75 செண்ட் செல்வம் என்ற நபரும் மீதமுள்ள 33 செண்ட் நிலத்தை ராமசாமியின் சட்டப்படியான வாரிசுகள் 1ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த கிரையத்திற்கு பிறகு 1ஆம் பிரதிவாதி பெயரில் புல எண்.229/3 உட்பிரிவு செய்யப்பட்டு புல எண்.229/3A2 என 1ஆம் பிரதிவாதி பெயரில் தனிப்பட்டா (பட்டா எண்.1072) வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

16) வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆகியன தாவா சொத்திற்காக குத்தகை செலுத்தப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.17 வரையிலான ஆவணங்கள் தாவா சொத்திற்கானதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.24 மற்றும் வா.சா.ஆ.25 ஆவணங்கள் கோவிலுக்கு குத்தகை செலுத்தியதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் வழக்கு சொத்திற்காக கட்டப்பட்டவை ஆகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.24 மற்றும் வா.சா.ஆ.25 ஆகியன 1ஆம் பிரதிவாதிக்கு கிரையம் ஏற்பட்ட பிறகும், வழக்கிற்கு பிறகும் என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எனது அனுபவத்தில் இடையூறு செய்ததாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகாரை வாங்கவில்லை நீதிமன்ற மூலம் பார்த்துக்கொள்ளுங்கள் என்று எழுதி கொடுத்துவிட்டு செல்லுமாறு கூறிவிட்டார்கள். எந்த தேதியில் அவ்வாறு புகார் கொடுக்க சென்றேன் என்றால் ஞாபகம் இல்லை.

17) நான் கிரையம் பெற்ற 60 செண்ட் நிலத்தை தவிர தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1985 முதல் தற்போது வரை தாவா சொத்தை நான் அனுபவம் செய்து வருவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திலிருந்து வரும் வருவாயிலிருந்து வாத்தலைநாச்சியம்மன் கோவிலுக்கு தொகை கொடுக்க வேண்டும் என்று ராமசாமி செட்டியார் எனக்கு கூறியதாக சொல்வதற்கு எழுத்துபூர்வமான ஆவணம் இல்லை என்றால் சரிதான், வாய்மொழியாக கூறி சென்றார். தாவா சொத்தை 1ஆம் பிரதிவாதி அனுபவித்து வந்ததின் அடிப்படையில்தான் அவருக்கு ராமசாமி வாரிசுகள் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றாலும், தாவா சொத்தில் முழு உரிமையாளர் என்ற அடிப்படையில் 1ஆம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றாலும் தவறு. நான் பொய்யான வழக்குமூலத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ள வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/ Vishalatchi

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.02.25 19:07:50 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU